2nd March 1961]

THE HON. SRI P. KAKKAN : ஆட்களைப் பொறுக்குவது என்பதும் அங்குள்ள ஹரிஜனங்களில் யாருக்குக் கொடுப்பது என்பதைப்பற்றியும் அங்குள்ள அதிகாரிகளும் கலெக்டர் முதலியவர்களும் கவனித்து யார் யாருக்குக் கொடுப்பது என்று பரிசிலனை செய்து முடிவு எடுக்கிறார்கள். இந்த திட்டத்தை இதர ஜில்லாக்களுக்கும் விஸ்தரிக்க வேண்டுமா என்பதைப்பற்றி அரசாங்கம் யோசனை செய்துகொண்டிருக்கிறது.

Road

* 515 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு ஜில்லாவில் ஏலகிரிமலையில் சுமார் 5 லட்சம் ரூபாய் செலவு செய்து புதிதாக ரோட்டு வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளதா ?

(இ) இதுவரை எவ்வளவு செலவு ?

(உ) சென்ற 4 மாத காலமாக ஏன் அந்த வேலை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) Rs. 4,05,986.

(*c*) The work is in progress and has not been stopped for the past four months.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், இப்பொழுது ஆறு அல்லது ஏழு மாத காலமாகிறது அந்த வேலை நிறுத்தி வைக்கப் பட்டு . . . .

MR. SPEAKER : கனம் மந்திரி அவர்கள் நிறுத்தி வைக்கப் படவில்லை என்று பதில் அளித்திருக்கிறாரே ?

SRI V. K. KOTHANDARAMAN : அப்படி வேலை ஏன் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று டிவிஷனல் இஞ்சினியரைக் கேட்டதற்கு அதற்கு வேண்டிய பணம் இப்பொழுது இல்லை என்றும் அதற்கு வேண்டிய பணத்தை எதிர் பார்க்கிறோம் என்றும் அந்தப் பணம் வந்தவுடன் வேலை ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் சொன்னது உண்மையா இல்லையா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினருக்கு போன இடத்தில் அப்படிப்பட்ட தகவல் கிடைத்திருக்கலாம். எனக்கு அந்தத் தகவல் இல்லை.

SRI T. KARIA GOUNDER : இந்த வேலைகளுக்கு ஒதுக்கப் பட்ட தொகை எவ்வளவு ? இந்த வேலை எப்பொழுது முடிவு அடையும் என்பதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் அறிவிப் பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : இந்த வேலைக்கு ஒதுக்கப்பட்ட தொகை 16·40 லட்சம் ரூபாய். அதில் 1960-61-ல் ஒதுக்கியதில் மூன்று லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. 1960-ல் நான்கு லட்சத்தி ஐந்தாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தி ஆறு ரூபாய் செலவு செய்து இருக்கிறார்கள். இந்த வேலையை எந்த விதமான தாமதமும் இல்லாது முழு பணத்தையும் செலவு செய்வது என்று அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது.

10-30 a.m. SRI S. M. ANNAMALAI : இந்தப் பாதைப்போடுவதற்காக நமது சர்க்காருக்கு மத்திய சர்க்காரிலிருந்து எவ்வளவு பணம் வந்திருக்கிறது? கனம் அமைச்சர் அவர்கள் ரோட்டு போடப் பட்டதாகச் சொன்னார்கள். வெறும் மண் ரோட்டுதான் போடப் பட்டிருக்கிறது. ஐந்து, ஆறு மாதங்களுக்கு மேலாகியும் வேலை நடைபெறவில்லை. அங்கு நானே நேரில் சென்று பார்த்திருக் கிறேன். இந்த வேலை தொடர்ந்து நடைபெறுவதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டது?

THE HON. SRI P. KAKKAN : மலைப்பிரதேசத்தில் ரோட்டுகள் போடுவதற்கு பாறைகளை உடைத்துப்போடவேண்டும். நவம்பர் மாதம் 1960-லேயே 4 லட்சத்தி 5 ஆயிரத்தி 986 ரூபாய் செலவிடப் பட்டு ரோட்டுபோட ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த வேலை நடைபெறுவதற்கு மத்திய சர்க்காரிலிருந்துதான் பணம் வருகிறது. பணம் வந்த பிறகுதான் வேலையும் தொடர்ந்து செய்ய முடியும்.

Tractor

* 516 Q.—SRI N. K. PALANISAMI :
SRI A. VEDARATHNAM :
SRI S. M. ANNAMALAI :
SRI A. A. RASHEED : } Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Madras Government had any talks with an American Company for establishing a factory for the manufacture of tractors and earth-moving machine; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) An industrial concern of U.S.A. has applied to the Government of India for a licence to set up a factory near Madras for the manufacture of tractors, cranes, drills and other items of earth-moving machinery. The application is under the consideration of the Central Government.

(*b*) No further details can be given at this stage.

Sir, I want to add that this question pelates to earth-moving machinery and lso tractors. A licence has been granted to another Madras Company for the manuufacture of tractors.

SRI N. K. PALANISAMI : இந்தக் கம்பெனி எவ்வளவு மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்டது? இதில் சர்க்காரின் பங்கு என்ன?